# நாளையதினம் பணிப்புறக்கணிப்பு இல்லை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு தீர்மானம்

## சுகாதார நிபுணர்கள் சங்கத்தலைவர் அறிவிப்பு



நாளையதினம் முன்னெடுக்கப்படவிருந்த பணிப்புறக்கணிப்பை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு சுகாதார தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

பணிப்புறக்கணிப்பு குறித்து சுகாதார அமைச்சின் செயலாளரோடு இடம்பெற்ற விசேட கூட்டத்தின் பின்னர் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டதாக சுகாதார நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், வேலைநிறுத்தம் குறித்து கலந்துரையாடுவதற்காக சுகாதார செயலாளர் இன்று முன்னெடுத்த விசேட கூட்டத்தின் பின்னர் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டது என்றும், வேலை நிறுத்தத்தை தற்காலிகமாக இடைநிறுத்த தீர்மானித்துள்ளோம் எனவும் கூறினார்.

நோயாளிகளின் உரிமைகளைப் பாதுகாப்பது, சுகாதார சேவைகளின் நல்வாழ்வைத் தவிர சுகாதார நிபுணர்களுக்கு வேறு எந்த நோக்கமும் இல்லை, என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.


# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 15 புதன்கிழமை 02.08.2023 கதிர் 42



செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV YouTube தளம்


# தனிமையில் சென்ற கோட்டாபய இறுதியில் படுகுழியில் வீழ்ந்தார்!

## சாகர வெளிப்படைக் கருத்து



கோட்டாபய ராஜபக்சவை நாங்கள் தனிமைப்படுத்தவில்லை. ராஜபக்சக்களிடமிருந்து விலகி தனித்து செயற்படுவதாகக் காண்பிப்பதற்காக அவர் தன்னைச் சுய தனிமைப்படுத்திக் கொண்டு பொதுஜன பெரமுன அரசைக் கடுமையாக விமர்சித்தவர்களை அமைச்சரவையில் இணைத்துக்கொண்டார், என்று

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் தனியார் தொலைக்காட்சியொன்றுக்காக இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தேசிய பாதுகாப்பு, தேசியம் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு 69 இலட்சம் மக்கள் கோட்டாபய ராஜபக்சவைத் தலைவராகத் தெரிவு 2➤




# மலையகம் 200 - நடைபவனி புதுக்குடியிருப்பில் இருந்து!

மலையக மக்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 வருடங்கள் பூர்த்தியாகியுள்ள நிலையில் அதனை நினைவு கூரும் வகையில் ஆரம்பிக்கப்பட்ட நடைபவனி, இன்று புதுக்குடியிருப்பில் இருந்து ஆரம்பமாகியது.

மன்னார் முதல் மாத்தளை வரை - என்ற தொனிப்பொருளில் ஆரம்பிக்கப்பட்ட குறித்த நடைபவனி காலை 9.30 மணிக்கு புதுக்குடியிருப்புச் சந்தியிலிருந்து ஆரம்பமாகியிருந்தது. 2➤

# ரூபாவின் பெறுமதி அதிகரிப்பு!

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி இன்று வலுவடைந்துள்ளது.

மத்திய வங்கியின் மாற்று விகிதங்களின் படி, இன்றைய தினம் அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 309 ரூபா 70 சதமாகவும், விற்பனை விலை 322 ரூபா 68 சதமாகவும் காணப்படுகின்றது.

இதேவேளை கடந்த ஜூலை 31ஆம் திகதி டொலரின் கொள்வனவு விலை 322.96 ரூபாவாகவும் விற்பனை விலை 335.40 ரூபாவாகவும் காணப்பட்டது.

# கண் சத்திர சிகிச்சைக்குப் பின்னர் ஏற்பட்ட பார்வைப் பாதிப்பு - விசாரணைகள் ஆரம்பம்



நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் கண் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்திய பின்னர் பார்வைப் பாதிப்புக்கு உள்ளான 15 பேர் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சிற்கு அறிக்கை சமர்ப்பிக்க பாராளுமன்றத்தில் நியமிக்கப்பட்ட 10 பேர் கொண்ட விசேட வைத்திய நிபுணர்கள் நேற்று நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

இந்த விசேட வைத்திய நிபுணர் குழுவோடு சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் திரு.ஆர்.எம்.எஸ்.கே.ரத்நாயக்கவும் இணைந்திருந்தார்.

கடந்த மே மாத முதல் பகுதியில் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் கண் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டவர்களில் 15 பேருக்கு கண்பார்வை மீள் திரும்புவதில் குறைபாடுகள் ஏற்பட்டு, அவர்கள் மேலதிக சிகிச்சைக்காக கண்டி 2➤

# சுகாதார அமைச்சரைப் பாதுகாத்தே தீருவோம்! மொட்டுக் கட்சியின் எஸ்.எம்.சந்திரசேன உறுதி

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி பாதுகாக்கும் என அக்கட்சியின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினரான எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். சுகாதார அமைச்சருக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியால் முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். கெஹலிய ரம்புக்வெலவை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி பாதுகாத்தே தீரும். ஐக்கிய மக்கள் சக்தியின் பிரேரணை, அரசின் பலத்தை இன்னொரு தடவை நிரூபித்துக் காட்ட நல்லதொரு சந்தர்ப்பமாகும், என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (03)

# ஈழத்தின் புகழ் பூத்த அறிவிப்பாளர் விமல் சொக்கநாதன் காலமானார்!



இலங்கை வானொலி வர்த்தக சேவையின் புகழ் பூத்த அறிவிப்பாளராகவும் பின்னர், பி.பி.சி. தமிழோசை அறிவிப்பாளாராகவும் கடமையாற்றிய விமல் சொக்கநாதன் லண்டனில் ஏற்பட்ட விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

சிறந்த மொழி 2➤

இலங்கையிலிருந்து வெளிவரும் மாலைச் செய்தி இதழ்

# போயா தினத்தன்று கூடிக் கூக்குரலிடுவதனால் தையிட்டி விகாரைப் பிரச்சினைக்கு தீர்வு வராது!

## ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் பேச்சாளர் ஐயாத்துரை ஸ்ரீ ரங்கேஸ்வரன் சுட்டிக்காட்டு!

தையிட்டி விகாரை விவகாரத்துக்கு ஒவ்வொரு போயா தினத்தன்றும் கூடிக் கூக்குரலிடுவதனால் எந்தவிதமான தீர்வும் கிடைக்கப்போவதில்லை என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் யாழ் மாவட்ட உதவி நிர்வாகச் செயலாளரும் ஊடகப் பேச்சாளருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சுமுகமான தீர்வைக் காண்பதற்கான முழு முயற்சியையும் மேற்கொண்டு வருகின்றார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் இன்றையதினம் ஊடகச் சந்திப்பொன்றை முன்னெடுத்திருந்த ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன், அண்மையில் தையிட்டி விகாரைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த அமைச்சர் இவ்விகாரை அமைந்துள்ள காணி தொடர்பாக விகாராதிபதி, படைத்தரப்பு, குறித்த பிரதேசத்தின் பிரதேச செயலர் மற்றும் காணி உரிமையாளர்களுடனும் கலந்துரையாடியிருந்தார்.

அதனடிப்படையில் விகாரை அமைக்கப்பட்டுள்ள பகுதி மற்றும் அதைச் சூழவுள்ள காணிகள் தொடர்பில் விகாராதிபதியுடன் தீர ஆராய்ந்தார். அதேபோன்று, குறித்த காணி உரிமையாளர்களுடனும் கலந்துரையாடியிருந்தார்.

இவ்விரு தரப்பினரது கருத்தக்களின் அடிப்படையில் சுமுகமான ஒரு தீர்வை எட்டுவதற்கான நடவடிக்கைகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எடுத்துவரும் நேரத்தில் அதற்குக் குந்தகம் விளைவிப்பதற்காக ஓர் அரசியல் குழுவின் சிலர், ஒவ்வொரு பௌர்ணமி




தினத்தன்றும் விகாரையை அண்மித்துள்ள பகுதிக்குச் சென்று புகைப்படங்கள் எடுத்து சமூகவலைத்தளங்களில் பரப்பி தமது அரசியல் சுயலாபத்தைத் தேடிவருகின்றனர்.

உண்மையில் ஆக்கபூர்வமாகவும் அறிவுபூர்வமாகவும் சிந்தித்து, மக்களின் நலன்சார்ந்த உரிமைகளை மீட்பதற்கான பொறிமுறைகளையே கையாளவேண்டும். ஆனால், இங்கு பௌர்ணமி அரசியல் நடத்துவதனூடாக மக்களின் காணிகளை மீட்கமுடியாது, எனத் தெரிவித்தார்.

தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக எடுக்கப்படும் முயற்சிகளுக்கு குந்தகம் விளைவிக்காது இருப்பதே அந்த மக்களுக்கு செய்யும் உபகாரம், என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# மேய்ச்சல் நிலம் வழங்கக் கோரி பண்ணையாளர்கள் போராட்டம்

கிளிநொச்சியில் மேய்ச்சல் நிலம் வழங்கக் கோரி மாடுகளுடன் பண்ணையாளர்கள் இன்று கவன வீர்ப்புப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

கிளிநொச்சி கோணாவில் கிராமத்தைச் சேர்ந்த கால்நடைவளர்ப்பாளர்களே தங்களுக்குரிய மேய்ச்சல் நிலத்தை கோரி இந்த கவனவீர்ப்பை மேற்கொண்டனர்.

நீண்ட காலமாக தங்களுக்குரிய மேய்ச்சல் நிலம் தொடர்பாகப் பல்வேறு தரப்பினர்களிடமும் கோரிக்கை விடுத்தபோதும் அது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும், விதைப்பு மற்றும் வறட்சியான காலங்களில் தங்களது கால்நடைகளை வளர்ப்பதில் கடும் நெருக்கடிகளை எதிர்கொள்வதாகவும் தெரிவித்துள்ள கால்நடை வளர்ப்பாளர்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் மக்கள் பிரதி நிதிகள் இந்த விடயத்தில் உரிய கவனம் செலுத்தி, விரைவாக மேய்ச்சல் நிலத்தை ஒதுக்கீடு செய்து தரவேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

இதன்போது போராட்டக்காரர்களுடன் கொண்டு வரப்பட்ட கால்நடைகளும் பதாதைகளைக் கொழுவியவாறு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (02)

## கோவிலூர் விஜிதாவின் “புதுவரவு” நூல் வெளியீடு



( வி.ரி.சகாதேவராஜா)

திருக்கோவில்பிரதேச விநாயகபுரம் கிராமத்தைச் சேர்ந்தவரும் இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் கடமை புரியும் பொலிஸ் சார்ஜன்டுமான கே.விஜிதாவின் “புதுவரவு “ எனும் சிறுவர் பாடல் நூல் வெளியீட்டு விழாவானது நேற்று முன்தினம் திருக்கோவில் கலாச்சார மத்திய நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.இந் நிகழ்வானது ஏ.எஸ்.கே. திருவதிகை கலைக்கூடத்தின் ஏற்பாட்டில் ஈழக்கவி .ஏ.கார்த்திகேசு தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரனும், கௌரவ அதிதியாக தென்கிழக்கு பல்கலைக்கழக வர்த்தக முகாமைத்துவபீட பேராசிரியர் எஸ். குணபாலனும் மற்றும் விசேட அதிதிகள் பலரும் கலந்துகொண்டனர்.

இந்நூலின் முதல் பிரதியானது சுப்பிரமணியம் கிருஸ்ணமூர்த்தி (தந்தை) திருமதி.கீதாசாவித்திரி கிருஸ்ணமூர்த்தி (தாய்) ஆகியோருக்கு வழங்கி வைக்கப்பட்டது.

## ஈழத்தின் புகழ் பூத்த அறிவிப்பாளர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெயர்ப்பாளரான இவர், அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்து தனது நூல் வெளியீட்டு விழாவில் பங்கேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

விமல் சொக்கநாதனின் மறைவுக்குப் பலரும் சமூக ஊடகங்களின் வாயிலாக இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

## கண் சத்திர சிகிச்சைக்குப் பின்னர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

அதேபோல, நுவரெலியாவிலிருந்து 15 பேர், கொழும்பில் கண் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டவர்கள் உட்பட மொத்தம் 40 பேருக்கு சிகிச்சையின் பின் கண்ணுக்கு ஊற்றப்பட்ட மருந்தினால் கண்பார்வை திரும்பாத பிரச்சனை பேசும் பொருளாக மாற்றம் பெற்றிருந்தது.

இந்த நிலையில், இது தொடர்பாக நாடாளுமன்றத்திலும் விவாதிக்கப்பட்டது. இதனையடுத்து இந்த விடயம் தொடர்பாக கவனம் செலுத்திய அரசாங்கம், நாடாளுமன்றில் அமைச்சரவை அங்கீகாரம் பெற்று, பத்துப்பேர் கொண்ட விசேட வைத்திய நிபுணர் குழுவை நியமித்து சுகாதார அமைச்சுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப் பணித்திருந்தது.

அதனடிப்படையில், பாதிக்கப்பட்ட நோயாளர்களைச் சந்தித்து விசாரணைகளை மேற்கொள்ளும் நடவடிக்கையில் இந்த நிபுணர் குழு ஈடுபட்டிருந்தது.

அதன் ஒரு கட்ட விசாரணைக்காக நுவரெலியாவில் கண்பார்வை பாதிக்கப்பட்ட 15 பேரிடம் நேற்று, நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் மகேந்திர செனவிரத்னவின் வழிகாட்டலின் கீழ், சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலின்படி நிறுவப்பட்ட விசேட குழு விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதன்போது, சத்திர சிகிச்சைக்கு பின் கண்பார்வை பலவீனமடைந்துள்ள நோயாளர்கள் விசேடமாக வரவழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர்.

மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் பெறப்பட்ட அறிக்கைகள் சுகாதார அமைச்சுக்கும் ஜனாதிபதிக்கும் வழங்கப்படவுள்ளதாக இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் திரு. ஆர்.எம்.எஸ்.கே.ரத்நாயக்க ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட கண் மருந்தினைப் பாவித்ததால் கண்பார்வைக் குறைபாடு ஏற்பட்டுள்ளதாக கருதப்படுவதாகத் தெரிவித்த சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர், மேலதிக நடவடிக்கைகளை சுகாதார அமைச்சு மேற்கொள்ளும் எனவும் குறிப்பிட்டார்.

## மலையகம் 200 - நடைபவனி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த நடைபயணத்தில் மலையக மக்களுக்கு ஆதரவைத் தெரிவிக்கும் வகையில், விழுது - ஆற்றல் மேம்பாட்டு மையத்தினரின் பங்குபற்றுதலோடு, மத குருக்கள், அரசியல் பிரதிநிதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

குறித்த நடைபவனியில் கலந்துகொள்ளும் அனைவருக்கும் ஆதரவை வழங்கும் விதமாக தாய்த் தமிழ் பேரவையினால் தாக சாந்தி உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

தமது போராட்டம், சிறந்த அங்கீகாரம், கல்வி, சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மீதான உறுதியான நடவடிக்கை, ஊதியம், வேலை, தொழிலாளர்களுக்கு சட்டப் பாதுகாப்பு, வீடமைப்பு மற்றும் வாழ்வாதாரங்கள் என்பனவற்றை வலியுறுத்தியே இந்த நடைபவனி இடம்பெறுகின்றது.

## தனிமையில் சென்ற கோட்டாபய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தார்கள். நெருக்கடியான சூழ்நிலையில் அவர் 69 இலட்சம் மக்களின் ஆணையைப் பாதுகாக்கவில்லை.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மீது நாட்டு மக்கள் கொண்டிருந்த நம்பிக்கை, 69 இலட்சம் மக்கள் ஆணை என்பன பலவீனமடையக் கூடாது என்பதற்காகவே அரசமைப்பின் பிரகாரம் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தோம்.

கொவிட் பெருந்தொற்று தாக்கத்தின் பின்னர் நாட்டில் உண்ண உணவு இல்லாமல் எவரும் நெருக்கடிக்குள்ளாகவில்லை. வெளிநாட்டு கையிருப்பு பற்றாக்குறையால் எரிபொருள், எரிவாயு விநியோகத்தில் தட்டுப்பாடு ஏற்பட்டது.

பொதுஜன பெரமுன தலைமையிலான அரசைப் பலவீனப்படுத்தும் செயற்பாட்டில் எமது அமைச்சரவை உறுப்பினர்கள் முன்னிலை வகித்தார்கள்.

எரிபொருள், எரிவாயுத் தட்டுப்பாடு, மின்விநியோகத் துண்டிப்பு ஆகிய காரணிகளால் நாட்டில் பாரிய நெருக்கடி ஏற்பட்டது. பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

மாறாக ராஜபக்சக்களிடமிருந்தும், பொதுஜன பெரமுனவில் இருந்தும் தனித்துச் செயற்படுவதாக மக்களுக்குக் காண்பிக்கும் வகையில் அவர் செயற்பட்டார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசைக் கடுமையாக விமர்சித்த விஜயதாஸ ராஜபக்ச, சுசில் பிரேமஜயந்த, விதுர விக்கிரமநாயக்க, ரொஷான் ரணசிங்க ஆகியோரை இறுதிக்கட்டத்தில் அமைச்சரவையில் இணைத்துக்கொண்டார்.

பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட தலைவர்களின் ஆலோசனைகளுக்கு முன்னுரிமை வழங்காமல் பஸில் ராஜபக்சவை நிதி அமைச்சர் பதவியில் இருந்தும், மஹிந்த ராஜபக்சவைப் பிரதமர் பதவியில் இருந்தும் விலகுமாறு கோட்டபய ராஜபக்ச வலியுறுத்தினார்.

நிறைவேற்று அதிகாரத்தின் தீர்மானத்துக்கு மதிப்பளித்து அவர்கள் பதவி விலகினார்கள். கடந்த வருடம் ஜூன் 9 ஆம் திகதி போராட்டத்தின்போது, கோட்டாபய ராஜபக்சவின் அருகில் இருந்தவர்கள் அனைவரும் அவரை விட்டுச் சென்றார்கள்.

நெருக்கடியான நிலையில் பஸில் ராஜபக்ச, மஹிந்த ராஜபக்ச ஆகியோர் மாத்திரமே அவரைப் பாதுகாத்தார்கள். ஆகவே, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவை ஒரு போதும் தனிமைப்படுத்தவில்லை.” - என்றும் அவர் தெரிவித்துள்ளார். (03)

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட - maalaikkathir@gmail.com




# சாய்ந்தமருதில் போதைக்கு எதிரான மாணவர் பேரணி

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை ஆலோசனைகு ,ணங்க, கல்முனை வலயக் கல்வி அலுவலக சிபாரிசின் அடிப்படையில் கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது கமுஃகமுஃ அல் - ஹிலால் வித்தியாலயத்தின் ஏற்பாட்டில் போதைப்பாவனைக்கு எதிரான வீதி ஊர்வலமும், போதைக்கு எதிரான பிரசாரமும், துண்டுப்பிரசுர விநியோகமும் பாடசாலை அதிபர் யூ.எல். நஸார் தலைமையில் இன்று சாய்ந்தமருது பிரதான வீதியில் நடைபெற்றது.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய வாகனத்தில் போதைப்பவனைக்கு எதிரான பிரசாரங்களுடன் பாடசாலை முன்றலில் ஆரம்பித்த இந்தப் பேரணி, சாய்ந்தமருது பொதுச்சந்தை வரை சென்று மீண்டும் மாளிகா சந்திவரை தொடர்ந்து மீளவும் பாடசாலை வளாகத்தை வந்தடைந்தது. இந்த பேரணியின்போது போதைப்பொருளினால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பிலான துண்டுப்பிரசுரங்களை கலந்துகொண்ட அதிதிகள், பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்களுக்கு வழங்கி வைத்தனர்.

இந்தப் பேரணியில் கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம், கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக், சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் எஸ்.எல்.சம்சுதீன், சாய்ந்தமருது கோட்டக்கல்வி அதி காரியும், உதவிக்கல்விப் பணிப்பாளருமான எம். என்.ஏ.மலீக், கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சீ.எம்.மாஹிர், கல்முனை வலயக்கல்வி அலுவலக உதவிக்கல்வி பணிப்பாளர்கள், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை சுகாதார உத்தியோகத்தர்கள், சாய்ந்தமருது பிரதேச செயலக அதிகாரிகள், சிவில் அமைப்புக்களின் பிரமுகர்கள், பாடசாலை முகாமைத்துவக் குழுவினர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

மாணவர்கள் சுலோகங்களைத் தாங்கிய பதாகைகளை ஏந்தியவாறு பேரணியில் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.

## தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு ரிக்கெட்



(எம்.எப். நவாஸ்)

தேசிய இளைஞர் தினத்தை முன்னிட்டு தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் வருடாந்தம் நடாத்தப்படும் அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்புக்கான ரிக்கெட் விற்பனை நிகழ்வு ,ன்று ஆரம்பமானது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் உத்தியோகபூர்வமாக, அதன் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அகமது சாபிர்க்கு அட்டாளைச்சேனை இளைஞர் சேவை அதிகாரி பி.எம். றியாத் முதல் ரிக்கெட்டை வழங்கி வைத்தார்.

இதன்போது உதவி பிரதேச செயலாளர் சட்டத்தரணி எப்.நஹ்ஜா முஸாபிர், நிர்வாக உத்தியோகத்தர் கே.பி. சலீம் ஆகியோர் உடனிருந்தனர்.

இந்த இளைஞர் அதிர்ஷ்ட சீட்டு இழுப்பு நிகழ்வானது எதிர்வரும் 2023 ஒகஸ்ட் மாதம் 12ஆம் திகதி இலங்கை இளைஞர் சேவை மன்றத்தினால் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



## ஓய்வுபெற்ற பிரதி அதிபருக்கு சேவை நலன் பாராட்டு விழா

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது கமு/கமு/லீடர் எம்.எச்.எம். அஸ்ரப் வித்தியாலயத்தில் கடந்த 10 வருடகாலமாக பிரதி அதிபராக கடமையாற்றி 31 வருடகால சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்து, கடந்த மாதம் ஓய்வு பெற்ற ஏ.எம். அப்துல் நிஸார் அவர்களுக்கான சேவை நலன் பாராட்டு விழா, பாடசாலை நலன்புரிக் குழுவினால் ஒழுங்கு செய்து பாடசாலை அதிபர் எம்.ஐ. சம்சுதீன் தலைமையில் பாடசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் கலந்து கொண்டார். கௌரவ அதிதிகளாக கல்முனை கல்வி மாவட்ட பொறியியலாளர் ஏ.எம். சாஹிர், சாய்ந்தமருது கோட்டக் கல்விப் பணிப்பாளர் என்.எம்.ஏ மலீக் இருவரும், விசேட அதிதிகளாக ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர் ஏ.சஹறூன், பாடசாலையின் முன்னாள் அதிபர் எம்.ஐ.எம்.இல்லியாஸ், கணக்காளர் எம்.எம்.றுஷான் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

விசேட மலர் வெளியீட்டோடு, ஓய்வு பெற்ற ஆசிரியர் நிஸார் அவர்களினால் பாடசாலை ஆரம்பக் கல்வி மாணவர்கள் பயனடையும் வண்ணம், மாணவர்களுக்காக உருவாக்கப்பட்ட அடிப்படைத் தமிழ் அறிவுகளை உள்ளடக்கிய "அமுதமொழி " என்ற நூலும் சகல மாணவர்களுக்கும் இலவசமாக வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## அலைகடலில் தீர்த்தமாடிய காரைதீவு மாவடிக் கந்தன்!





(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற காரைதீவு மாவடி கந்தசுவாமி ஆலய வருடாந்த ஆடிவேல் விழா உற்சவத்தின், தீர்த்தோற்சவம் ,ன்று புதன்கிழமை உற்சவ பிரதம குரு சிவஸ்ரீ க.சி.லோகநாதக் குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

ஆயிரக்கணக்கான பக்தர்கள் திரளுக்கு மத்தியில், ஏராளமான காவடிகள் சகிதம் ஊர்வலமாக வந்து அலைகடலில் மாவடிக்கந்தன் தீர்த்தமாடிய காட்சியை பக்தர்கள் தரிசித்தனர்.

இன்று காலை 6.30 மணியளவில் ஆலயத்தில் விசேட பூசையுடன் பிள்ளையார் மற்றும் வள்ளி தெய்வானை சகிதம் புறப்பட்ட முருகப் பெருமான் நண்பகல் 12 மணியளவில் வங்கக்கடலில் தீர்த்தமாடினார்.

ஏனைய அடியார்களோடு, தந்தையரை ,ழந்தவர்கள் பிதிர்க்கடன் செலுத்தித் தீர்த்தமாடினர். தீர்த்தமாடினர்.

கடந்த மூன்று வருடங்களின் பின்னர் மாவடிக் கந்தசுவாமி ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் கடந்த மாதம் நடைபெற்றது. அதன்பின் ,டம்பெறும் முதலாவது ஆடிவேல் விழா உற்சவத்தின் கொடியேற்றம் கடந்த மாதம் 18 ஆம் திகதி நடைபெற்று, ஆலய பிரதம குரு சிவஸ்ரீ கோவர்த்தன சர்மா முன்னிலையில் உற்சவ பிரதம குரு சிவஸ்ரீ க.ச.லோகநாதக்குருக்கள் தலைமையில் உற்சவத் திருவிழாக்கள் தொடர்ந்து 13 நாட்கள் ,டம்பெற்று, ,ன்று தீர்த்த உற்சவத்துடன் நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

## இ.போ.ச சாரதிகளின் தவறுகள் ஆவணப்படுத்தத் தீர்மானம்!

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் சாரதிகளின் தவறுகளை ஆவணப்படுத்தும் திட்டத்தை தொடங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விபத்துகளைத் தடுக்கவும், பாதுகாப்பான போக்குவரத்து நடவடிக்கைகளை மேற்கொள்வதை ஊக்குவிக்கும் வகையிலும் இந்த திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இதன் கீழாக, சாரதிகளுக்கு தகுதிப் பரிசோத னைக்கு என புத்தகம் ஒன்றினை அறிமுகப்படுத்த வும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அண்மைக் காலங்களில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துகள் விபத்திற்குள்ளாவதைக் கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான 218 பேருந்துகள் விபத்திற்குள்ளாகியுள்ள அதே நேரம் 19 பேர் உயிரிழந்துமுள்ளனர்.

இந்த விபத்துக்கள் காரணமாக இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் வருடாந்தம் சுமார் 30 முதல் 40 மில்லியன் ரூபா நட்டஈடாக செலுத்த வேண்டி ஏற்படுவதாக குறித்த சபை சுட்டிக்காட்டியுள்ளது.

## பதின்ம வயது திருமணத்தைப் பற்றிப் பேசும் "சேறு" - சாவகச்சேரி பாலா திரையரங்கில்

பதின்ம வயது திருமணத்தைப் பற்றிப் பேசும் "சேறு" என்கிற ஈழத்து குறும்படம் ஓகஸ்ட் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு சாவகச்சேரி "பாலா" திரையரங்கில் திரையிடப்படவுள்ளது.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் படக்குழுவினர் இதனைத் தெரிவித்தனர்.

குறித்த குறும்படத்தை மூன்று பாடசாலைகளில் திரையிட்டதாகவும், அனைத்துப் பாடசாலை மாணவர்களும் இதனைப் பார்க்கவேண்டும் என்றும் படக் குழுவினர் வேண்டுகோள் விடுத்தனர்.

லிப்ஸிஜாவின் இயக்கத்தில் உருவாகியுள்ள சேறு குறும்படத்தில், ஒளிப்பதிவை சசிகரன் யோவும் இசையை பிரசாந் கிருஸ்ணபிள்ளையும் ஒளியமைப்பை ஜெனிஸ்ரனும் ஒப்பனையை டேறியனும் கலை இயக்குநராக



ஜொனாத்தும் படத்தொகுப்பு மற்றும் தயாரிப்பு மேற்பார்வையை விமல்ராஜ்ஜும் ஆங்கில உபதலைப்பிடலை சர்மிலக்சனும் பின்னணிக் குரல் பதிவை தமிழரசி, சிவராசா ஆகியோரும் செய்துள்ளனர்.

குறும்படத்தில் நடிகர்களாக துர்க்கா மகேந்திரன், டேறியன், டினேஸ், ஜொனாத், சுஜனி, சுபாஷினி, புஸ்பராணி, அம்பலம் ஆகியோர் பணியாற்றியுள்ளனர்.

# துருக்கியில் பேருந்து பள்ளத்தில் விழுந்து விபத்து - 7 பேர் மரணம்



துருக்கியில் கிழக்கு கார்ஸ் மாகாணத்தின் எர்சுரம் - கார்ஸ் தேசிய நெடுஞ்சாலையில் பேருந்து ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது. குறித்த இந்த பேருந்தில் 40 க்கும் அதிகமான பயணிகள் பயணம் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

துருக்கியின் காராகுட் என்ற இடத்துக்கு அருகே சென்று கொண்டிருந்தபோது பேருந்து திடீரென சாரதியின் கட்டுப்பாட்டை இழந்ததால் வீதியோரம் இருந்த பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த மீட்புக் குழுவினர் மீட்பு பணியில் ஈடுபட்டனர்.

இந்த விபத்தில் 7 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாகவும் 23 பேர் காயங்களுக்குள்ளாகிய நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (மி)



## உலகின் மிக வயதான நபர் உயிரிழந்தார்!

பிரேசிலைச் சேர்ந்த உலகின் மிக வயதான நபர் ஜோஸ் பாலினோ கோம்ஸ் தனது 127 ஆவது வயதில் உயிரிழந்துள்ளார்.

அடுத்த வாரம் 128 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாட இருந்த நிலையில், கோம்ஸ் உயிரிழந்துள்ளமை குறித்து பலரும் கவலை வெளியிட்டுள்ளனர்.

மினாஸ் ஜெரைஸில் அமைந்துள்ள பெட்ரா பொனிடாவில் உள்ள அவரது வீட்டில் உயிரிழந்த கோம்ஸின் உடல், கடந்த சனிக்கிழமை அங்குள்ள காரிகோ டொஸ் பியால்ஹோஸில் அவரது உறவினர்கள் முன்னிலையில் அடக்கம் செய்யப்பட்டது.

கோம்ஸின் திருமணச் சான்றிதழின் படி 1917 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி அவர் பிறந்திருந்தார்.

இவர், உலகப் போர்கள் மற்றும் உலகை வதைத்த மூன்று கடும் தொற்று நோய்த் தாக்கங்களிலிருந்து தப்பியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (மி)

## ஈரானில் அதிகரித்த வெப்பநிலை இரு நாட்களுக்கு பொது விடுமுறை



ஈரானில் அதிகரித்த வெப்பநிலை காரணமாக இன்றும் நாளையும் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வயதானவர்களையும் உடல்நலப் பாதிப்புக்குள்ளானவர்களையும் வெளியே நடமாடாமல் வீட்டிற்குள்ளேயே இருக்குமாறும் ஈரான் அரசாங்கம் அறிவுறுத்தியுள்ளது.

ஈரானின் தெற்கு நகரமான அஹ்வாஸில் இந்த வாரம் வெப்பநிலை 51 பாகை செல்சியஸை தாண்டியுள்ளதாக ஈரானிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது குறித்து ஈரானிய அரசாங்க ஊடகப் பேச்சாளர் அலி பஹடோரி ஜஹ்ரோமி குறிப்பிடுகையில், புதன் மற்றும் வியாழன் விடுமுறை தினங்களாக இருக்கும் அதேவேளை, வைத்தியசாலைகள் மிகுந்த எச்சரிக்கையுடன் செயற்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது என்றார். இதே வேளை, நாளை தெஹ்ரானில் 39 பாகை செல்சியஸ் வெப்ப நிலை நிலவும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மி)

## பொருளாதாரத் தடைகளை நீக்க ஆப்கானிஸ்தான் வேண்டுகோள்




ஆப்கானிஸ்தானுக்கு எதிரான அமெரிக்கத் தடைகளை நீக்க வேண்டும் என்று ஆப்கானிஸ்தானின் தற்காலிக வெளியுறவு அமைச்சர் அமீர் கான் முட்டாகி, டோகாவில் நடைபெற்ற கூட்டத்தில் அமெரிக்க அதிகாரிகளிடம் கூறியதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

முன்னதாக ஆப்கானிஸ்தானில் தாலிபான்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர் பல்வேறு பொருளாதாரத் தடைகளை அமெரிக்க அரசு விதித்தது. இதனால், ஆப்கானிஸ்தானின் பொருளாதாரம் சரிவைச் சந்தித்தது. இந்தச் சூழலில் தம்மீதான தடைகளை நீக்கக்கோரி அந்த நாட்டின் தற்காலிக நிதியமைச்சர் ஆமீர்கான் வேண்டுகோள் விடுத்துள்ளமை கவனிக்கத்தக்கது.

## இந்தியாவுடன் போர் இனி தேவையற்றது பாகிஸ்தான் பிரதமர் ஷெரீப் தெரிவிப்பு

இந்தியாவுடனான போர் என்பது இனி தேவையற்றது, என பாகிஸ்தான் பிரதமர் ஷெர்பாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

மேலும், காஷ்மீர் உள்ளிட்ட அனைத்துப் பிரச்சினைகள் குறித்தும் இந்தியாவுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்வதற்குத் தயாராக உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எல்லை தாண்டிய தீவிரவாதம் காரணமாக இந்தியா - பாகிஸ்தான் இடையிலான அரசாங்க உறவுகள் விரிசல் அடைந்துவிட்டன. இச்சூழ்நிலையில் இந்தியாவுடன் போர் நடத்துவது தேவையற்றது என ஷெரீப் தெரிவித்துள்ளார்.



ஆனால், ஜம்முகாஷ்மீர் இந்தியாவுக்கான பகுதி எனவும் அது குறித்து பேச்சுவார்த்தை நடத்த முடியாது எனவும் இந்தியா ஏற்கனவே திட்டவட்டமாக க் கூறியிருக்கிறது.

மேலும், பாகிஸ்தான் தீவிரவாதத்தை முழுவதுமாக கைவிடும் வரை பேச்சுவார்த்தைக்கு இடமில்லை என்ற தனது நிலைப்பாட்டில் இந்தியா உறுதியாக உள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (மி)



## அமெரிக்காவில் அதிகரித்த பிளாஸ்டிக் குப்பைகள்! - விதிக்கப்பட்ட கட்டுப்பாடு!

அமெரிக்காவில் ஆண்டுதோறும் 32 கோடி தொன்கள் பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்தப்படுவதாகவும், இதில் 95 சதவீதமானவை ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் குப்பைகள் எனவும் நுகர்வோர் மற்றும் தொழிலாளர் பாதுகாப்புச் சபையின் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, அமெரிக்காவின் மிகப் பெரிய நகரங்களுள் ஒன்றான நியூயோர்க்கில் ஒருமுறை மட்டுமே பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களைப் பயன்படுத்த கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, விடுதிகள் மற்றும் உணவகங்களில் பிளாஸ்டிக் போத்தல்கள், கரண்டி மற்றும் கத்திகள் போன்றவற்றை வாடிக்கையாளர் கேட்காமல் வழங்கக்கூடாது எனவும், இதனை மீறும் நிறுவனங்களுக்கு அபராதம் விதிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒருமுறை மட்டுமே பயன்படுத்தும் பிளாஸ்டிக் குப்பைகளின் பயன்பாட்டைக் குறைக்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (மி)



# 2024 - ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் நடைபெறவுள்ள கால விபரம் வெளியானது!

மேற்கிந்தியத் தீவுகளும் ஐக்கிய அமெரிக்காவும் இணைந்து நடத்தும் ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரானது அடுத்தாண்டு ஜூன் 4ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஐசிசியின் ஒன்பதாவது ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் மொத்தம் 20 அணிகள் பங்கேற்கவுள்ளன. போட்டியை நடத்தும் மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் ஐக்கிய அமெரிக்க அணிகள் நேரடியாகவும், இறுதியாக கடந்த ஆண்டு நடைபெற்ற ரி-20 உலகக் கிண்ணத்தில் முதல் 8 இடங்களைப் பிடித்த அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, இந்தியா, நெதர்லாந்து, நியூசிலாந்து, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா மற்றும் இலங்கை அணிகளும், ரி-20 அணிகளுக்கான தரவரிசை அடிப்படையில் ஆப்கானிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் அணிகளும் இந்தத் தொடருக்குத் தகுதி பெற்றுள்ளன.

எஞ்சியுள்ள 8 இடங்களைத் தேர்வு செய்ய நடைபெற்று வரும் தகுதிகாண் போட்டிகளில் இதுவரை ஸ்கொட்லாந்து, அயர்லாந்து, பப்புவா நியூ கினியா ஆகிய 3 அணிகள் தகுதி பெற்றுள்ளன. ஆசியா, ஆபிரிக்கா, அமெரிக்க பிராந்தியங்களில் இருந்து மேலும் 5 நாடுகள் இந்தத் தொடருக்குத் தகுதி பெறவுள்ளன.

இந்தத் தொடருக்கான போட்டிகள் 10 மைதானங்களில் நடைபெறவுள்ளதாகவும், அமெரிக்காவில் போட்டிகளை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள மைதானங்களை ஐசிசி அதிகாரிகள் குழு இந்த வாரம் ஆய்வு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவைப் பொறுத்தமட்டில் லடர்ஹில், புளோரிடா மற்றும் மொரிஸ்வில்லி, டல்லஸ் மற்றும் நியூயோர்க் ஆகிய இடங்களில் ஏற்கனவே சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், டல்லஸில் உள்ள கிராண்ட் ப்ரேரி மைதானம், மொரிஸ்வில்லில் உள்ள சர்ச் ஸ்ட்ரீட் பார்க் மைதானம் மற்றும் நியூயோர்க்கில் உள்ள வான் கார்ட்லாண்ட் பார்க் மைதானம் ஆகிய 3 மைதானங்களும் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளை நடத்த இன்னும் அங்கீகரிக்கப்படவில்லை.

எனவே, ரி-20 உலகக் கிண்ணப் போட்டிகள் நடைபெறும் மைதானங்கள் குறித்து, மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் அமெரிக்க கிரிக்கெட் சபைகளுடன் கலந்துரையாடி அடுத்த சில வாரங்களில் ஐசிசி இறுதி முடிவுகளை எடுக்கும் எனத் தெரியவருகிறது.

# துடுப்பாட்டப் பயிற்சியை மீண்டும் ஆரம்பித்தார் கேன் வில்லியம்சன்

காலில் ஏற்பட்ட காயம் காரணமாக சிகிச்சை பெற்று வந்த நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் கேன் வில்லியம்சன் மீண்டும் துடுப்பாட்டப் பயிற்சியில் ஈடுபடத் தொடங்கியுள்ளார்.

ஐபிஎல் 2023 போட்டியில் குஜராத் அணியில் இடம்பெற்றிருந்த கேன் வில்லியம்சன், சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கு எதிரான முதல் ஆட்டத்தில் களத்தடுப்புச் செய்யும்போது, வலது காலில் ஏற்பட்ட காயத்தினால் அவதியுற்றார். மருத்துவர்களின் அறிவுறுத்தலின் பேரில் நியூசிலாந்து திரும்பிய அவருக்கு ஏப்ரல் மாதத்தில் சத்திரசிகிச்சை நடைபெற்றது.

இந்தியாவில் நடைபெறவுள்ள ஒருநாள் சர்வதேச உலகக் கிண்ணத் தொடருக்குள் அவர் போதிய உடற்தகுதி பெறவில்லை என்றாலும் அணியின் ஆலோ



சகராகச் செயல்படுவார் எனத் தகவல்கள் வெளியாகியிருந்தன. இந்தச் சூழ்நிலையில் வில்லியம்சன் மீண்டும் துடுப்பாட்டப் பயிற்சியை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளார்.

தனது இன்ஸ்டகிராம் பக்கத்தில் தான் வலைப் பயிற்சியில் துடுப்பெடுத்தாடும் காணொளியைப் பகிர்ந்துள்ள அவர், நீண்ட நாட்களுக்குப் பிறகு வலைப் பயிற்சியில் பந்துகளை எதிர்கொள்வது அருமையாக உள்ளது, எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஜூன் மாதத்தில் கேன் வில்லியம்சன் தனது காயம் குறித்துப் பேசுகையில், "எனக்கு இதுபோன்ற நீண்ட காலப் பாதிப்பைத் தரும் காயம் ஏற்பட்டதில்லை. இதிலிருந்து ஒவ்வொரு வாரமும் கொஞ்சம் கொஞ்சமாக மீண்டு வருகிறேன். ஆனால், இந்தப் பயணம் நீளமானது. சில சமயங்களில் இது அச்சுறுத்துவதாகவும் இருக்கும். இருப்பினும் ஒவ்வொரு வாரமும் சிறிய பயிற்சிகளில் தேர்ச்சி பெறுவது அருமையான அனுபவம்" - எனத் தெரிவித்திருந்தார்.

# எல்பிஎல் 2023 ரி-20 தொடரில் தம்புள்ள அணிக்கு முதல் வெற்றி



ஜப்னா கிங்ஸ் அணியை 8 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்திய தம்புள்ள அவுரா அணி நடப்பு எல்பிஎல் தொடரில் தனது முதல் வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

தம்புள்ள அவுரா அணிப் பந்துவீச்சாளர்களின் துல்லியமான பந்துவீச்சு, ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் அவிஷ்க பெர்னாண்டோவின் அரைச் சதம் மற்றும் குசல் பெரேராவின் அபாரத் துடுப்பாட்டமும் தம்புள்ள அணியின் வெற்றியில் முக்கிய பங்காற்றின.

லங்கா பிரீமியர் லீக் தொடரில் நேற்று மாலை நடைபெற்ற ஜப்னா கிங்ஸ் மற்றும் தம்புள்ள அவுரா அணிகள் விளையாடிய நான்காவது லீக் போட்டியில், நாணயச் சுழற்சியில் வென்ற ஜப்னா கிங்ஸ் அணியின் தலைவர் திசர பெரேரா முதலில் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார்.

அதன்படி, முதலில் களமிறங்கிய ஜப்னா அணிக்கு ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான சரித் அசலங்க அரைச் சதம் அடித்து நம்பிக்கை கொடுத்தார். எனினும், ஏனைய துப்பாட்ட வீரர்கள் சோபிக்காது போக, 20 ஓவர்கள் நிறைவில் ஜப்னா கிங்ஸ் அணி 7 விக்கெட்டுகளை இழந்து 129 ஓட்டங்களை எடுத்தது.

தம்புள்ள அவுரா அணியின் பந்துவீச்சில், பினுர பெர்னாண்டோ 27 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களை வீழ்த்தினார்.

இதையடுத்து 130 ஓட்டங்கள் என்ற இலகுவான வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய தம்புள்ள அணிக்கு அவிஷ்க பெர்னாண்டோ - குசல் மெண்டிஸ் ஜோடி அதிரடியான ஆரம்பத்தைப் பெற்றுக் கொடுத்தது. இதில் குசல் மெண்டிஸ் 29 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். அவிஷ்க பெர்னாண்டோவுடன் ஜோடி சேர்ந்த குசல் பெரேரா சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர். அவிஷ்க பெர்னாண்டோ அரைச் சதம் அடித்து இறுதிவரை ஆட்டமிழக்காமல் 52 ஓட்டங்களையும், குசல் பெரேரா 34 ஓட்டங்களையும் எடுத்து அணிக்கு வெற்றியைத் தேடிக்கொடுத்தனர்.

இதன்மூலம் தம்புள்ள அவுரா அணி 16.2 ஓவர்களில் இலக்கை எட்டி, 8 விக்கெட் வித்தியாசத்தில் நடப்புச் சம்பியன் ஜப்னா கிங்ஸை வீழ்த்தி அபார வெற்றியைப்பெற்றது.

தனது ஆரம்பப் போட்டியில் கொழும்பு ஸ்ட்ரைக்கர்ஸ் அணியை வீழ்த்திய ஜப்னா கிங்ஸ் அணி முதலாவது தோல்வியைச் சந்தித்தது.

இப்போட்டியில் அரைச் சதம் அடித்து எல்பிஎல் தொடர் வரலாற்றில் அதிக அரைச் சதம் (8) அடித்த வீரர்களில் முதலிடம் பிடித்த அவிஷ்க பெர்னாண்டோவிற்கு ஆட்ட நாயகன் விருது வழங்கப்பட்டது. இதன்மூலம் எல்பிஎல் தொடர் வரலாற்றில் அதிக தடவைகள் (7) ஆட்ட நாயகன் விருதை வென்ற வீரராகவும் அவர் பெயர் பதித்தார்.




# ஒருநாள் கிரிக்கெட் தொடரையும் அதிரடியாக வென்றது இந்தியா!

டிரினிடாட் பிரையன் லாரா மைதானத்தில் நடைபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் - இந்திய அணிகளுக்கிடையிலான தொடரின்கடைசி ஒருநாள் ஆட்டத்தில் இந்திய அணி அபாரமான வெற்றியைப்பெற்று தொடரையும் கைப்பற்றியுள்ளது.

நாணயச் சுழற்சியில் வென்ற மே.இ.தீவுகள் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்து, இரண்டாவது போட்டியில் விளையாடியே அதே அணியுடன் களமிறங்கியது. ஹர்திக் பாண்டியா தலைமையிலான இந்திய அணியில் ருதுராஜ், உனட்கட் ஆகியோர் அணியில் இடம்பிடித்திருந்தனர்.

43 பந்துகளில் 50 ஓட்டங்களை எட்டிய சுப்மன் கில், இந்தத் தொடரின் மூன்றாவது அரைச் சதத்தைப் பதிவு செய்தார். அவர் 85 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். மறுமுனையில் நன்றாக விளையாடிக் கொண்டிருந்த இஷான் கிஷன், கரையா பந்தில் ஸ்டம்பிங் முறையில் ஆட்டமிழந்தார். 64 பந்துகளை எதிர்கொண்ட அவர் 8 பவுண்டரிகள் 3 சிக்ஸர்கள் உடன் 77 ஓட்டங்களைக் குவித்தார். சஞ்சு சாம்சன், 41 பந்துகளில் 4 சிக்ஸர்கள் 2 பவுண்டரிகள் உடன் 51 ஓட்டங்களை எடுத்தார்.

சூர்யகுமார் - பாண்டியா இணையின் அதிரடியான ஆட்டத்தின் உதவியோடு இந்திய அணி, 300 ஓட்டங்களைக் கடந்தது. 52 பந்துகளில் 5 சிக்ஸர்கள் 4 பவுண்டரிகள் உடன் 70 ஓட்டங்களை பாண்டியா எடுத்தார். 35 ஓட்டங்களில் சூர்யகுமார் ஆட்டமிழந்தார்.

50 ஓவர்கள் முடிவில் இந்தியா 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 351 ஓட்டங்களைச் சேர்த்தது இந்திய அணி. கரீபியன் மண்ணில் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக இந்தியாவின் அதிகபட்ச ஒருநாள் போட்டி ஓட்ட எண்ணிக்கை இதுவாகும். மேற்கிந்தியத் தீவுகள் தரப்பில் ரொமாரியா ஷெப்பர்ட் 2 விக்கெட்டுகளையும், ஜோசப், மோதி, கரையா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

352 ரன்கள் என்ற பெரிய இலக்குடன் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி முகேஷ் குமாரின் பந்து வீச்சிசைச் சமாளிக்க முடியாது அடுத்தடுத்து விக்கெட்களை இழந்தது.

35.3 ஆவது ஓவர்களில் 151 ஓட்டங்களுக்கு மே.இ.தீவுகள் அணி சகல விக்கெட்களையும் இழந்து, 200 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இந்திய அணி, இந்தப் போட்டியை வென்றதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட தொடரை 2-1 என்று கைப்பற்றியது. ஷர்துல் தாக்குர் 4, முகேஷ் குமார் 3, குல்தீப் யாதவ் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

சுப்மன் கில் ஆட்ட நாயகனாகவும், இஷான் கிஷன் தொடர் நாயகனாகவும் அறிவிக்கப்பட்டனர்.

2006 இல் இருந்து இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடர் எதனையும் வெல்ல முடியவில்லை என்ற மேற்கிந்தியத் தீவுகள் அணியின் சோகம் தொடர்கிறது.

## டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து மீண்டும் ஓய்வை அறிவித்தார் மொயீன் அலி

ஓவல் மைதானத்தில் நடைபெற்ற ஆஷஸ் தொடரின் ஐந்தாவது டெஸ்டை வென்ற இங்கிலாந்து அணி, தொடரை 2-2 என சமன் செய்தது.

இந்தப் போட்டியின் கடைசி நாளில் அவுஸ்திரேலிய அணியின் வெற்றிக்கு 249 ஓட்டங்கள் தேவைப்பட்டன. கைவசம் 10 விக்கெட்டுகளும் இருந்தன. ஆனால், கடைசி 3 டெஸ்ட்களில் சிறப்பாக விளையாடிய இங்கிலாந்து அணி, இதிலும் வெற்றிக்காகக் கடுமையாகப் போராடியது.

அவுஸ்திரேலிய அணியை, 94.4 ஓவர்களில் 334



ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்கச் செய்து வெற்றிபெற்றுக்கொண்டது. கடைசி இரு விக்கெட்டுகளையும் வீழ்த்திய ஸ்டுவர்ட் ப்ரோட், சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து விடைபெற்றார். வோக்ஸ் 4, மொயீன் அலி 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்கள்.

இந்த நிலையில், டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக இங்கிலாந்தின் சகலதுறை வீரர் மொயீன் அலியும் அறிவித்துள்ளார். 2021 இல் டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்ற மொயீன் அலி, இங்கிலாந்து அணித்தலைவர் ஸ்டோக்ஸின் வேண்டுகோளை ஏற்று மீண்டும் டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடச் சம்மதித்தார். இந்த ஆஷஸ் தொடரில் 4 டெஸ்டுகளில் 180 ஓட்டங்களையும் 9 விக்கெட்டுகளையும் எடுத்து இங்கிலாந்து அணியின் வெற்றிகளுக்கு அவர் உதவியிருந்தார்.

ஓவல் டெஸ்ட் முடிந்த பிறகு பேட்டியளித்த மொயீன் அலி, இந்திய அணியுடனான டெஸ்ட் தொடருக்கு அணித்தலைவர் ஸ்டோக்ஸ் என்னை அழைத்தால், அவருடைய குறுஞ்செய்தியை நான் அழித்துவிடுவேன். டெஸ்ட் கிரிக்கெட்டில் நான் விளையாடி முடித்துவிட்டேன், என்றார். இதையடுத்து அவருடைய டெஸ்ட் ஓய்வு உறுதி செய்யப்பட்டுள்ளது.

36 வயதான மொயீன் அலி, 68 டெஸ்டுகளில் விளையாடி 3094 ஓட்டங்களைப் பெற்றுள்ளதோடு, 204 விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளார்.

## சிங்கப்பூரிடமும் தோல்வியடைந்தது இலங்கையின் வலைப்பந்தாட்ட அணி



தென்னாபிரிக்காவில் நடைபெற்றுவரும் வலைப்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடரின் கடைசி 4 இடங்களைத் தீர்மானிக்கும் குழு ஈ யிற்கான போட்டியில் சிங்கப்பூரிடம் 55-52 என்ற புள்ளிகள் கணக்கில் இலங்கை தோல்வியடைந்தது.

ஆசிய வலைப்பந்தாட்ட சம்பியன்ஷிப்பின் இறுதிப் போட்டி உள்ளடங்கலாக தொடர்ச்சியாக சவால் கொடுத்துவரும் சிங்கப்பூர் அணியுடனான போட்டியொன்றில், 8 ஆட்டங்களின் பின்னர் இலங்கை அணி தோல்வியடையும் முதல் சந்தர்ப்பமாக இது மாறியுள்ளது.

முதல் கால்பகுதியை சிங்கப்பூர் அணி 19-10 என்று 9 புள்ளிகள் முன்னிலையுடன் கைப்பற்றியது.

தொடர்ந்து, போட்டியைச் சமப்படுத்தும் நோக்கில் களமிறங்கி விளையாடிய இலங்கை அணி, சிங்கப்பூர் அணிக்கு சவால் கொடுத்து, இரண்டாவது கால்பகுதியை 17-7 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றி, 27-26 என முதல்பாதியில் முன்னிலை பெற்றது.

மூன்றாவது கால் பகுதியின் மத்திய பகுதிவரை 35-32 என இலங்கை அணி முன்னிலையை தக்க வைத்திருந்த போதும், தொடர்ச்சியாக 5 புள்ளிகளைப் பெற்றுக்கொண்டு முன்னேறிய சிங்கப்பூர் அணி 42-40 என 2 புள்ளிகளால் முன்னேறியது.

இதனையடுத்து வெற்றியை உறுதிசெய்யும் இறுதிக் கால்பகுதியில் தர்ஜினி சிவலிங்கத்தின் வருகையுடன் 44-44 என இலங்கை அணி ஒரு கட்டத்தில் புள்ளிகளைச் சமப்படுத்தியது. எனினும், இறுதியில் 3 புள்ளிகளைத் தொடர்ச்சியாகப் பெற்று முன்னேறிய சிங்கப்பூர் அணி, 55-52 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றியைத் தனதாக்கிக்கொண்டது.

இலங்கை அணிக்காக தர்ஜினி சிவலிங்கம் 27 முயற்சிகளில் 22 புள்ளிகளையும், திசாலா அல்கம 31 முயற்சிகளில் 28 புள்ளிகளையும் பெற்றுக் கொடுத்தனர்.

இலங்கை அணியானது தங்களுடைய அடுத்த போட்டியில் சிம்பாப்வே அணியை எதிர்கொள்ளவுள்ளது.



## "த ஹன்ரட்" தொடரிலிருந்து ரஷீட் கான் விலகிக்கொண்டார்

ஆப்கானிஸ்தான் அணியின் நட்சத்திர சுழல் பந்து வீரரான ரஷீட் கான் இந்தப் பருவத்திற்கான இங்கிலாந்தின் "த ஹன்ரட்" தொடரிலிருந்து வெளியேறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ரஷீட் கான் இந்த பருவத்திற்கான ஹன்ரட் தொடரில் ட்ரென்ட் ரொக்கேட்ஸ் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தார்.

எனினும் தற்போது அவருக்கு ஏற்பட்ட உபாதை காரணமாக அவரால் இம்முறை அந்தத் தொடரில் விளையாட முடியாது எனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. ரஷீட் கானின் உபாதை தொடர்பாக மேலதிக விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

இவ்வார இறுதியில் அமெரிக்காவின் மேஜர் லீக் தொடரில், எம்ஐ நியூயோர்க் அணி சம்பியன் பட்டம் வெல்வதற்கு முக்கிய காரணமாக அமைந்த ரஷீட் கான் தற்போது ஹன்ரட் தொடரில் இல்லாத நிலையில், அவரின் இடத்தினைப் பிரதியீடு செய்ய பாகிஸ்தானின் சுழல் சகலதுறைவீரரான இமாத் வஸீம் அழைக்கப்பட்டுள்ளார்.

முதல் மூன்று போட்டிகளிலும் ட்ரென்ட் ரொக்கேட் அணிக்காக அவர் ஆடிய பின்னர் அவரின் இடம் நியூசிலாந்தின் இஸ் சோதி மூலம் பிரதியீடு செய்யப்படும் எனக் கூறப்பட்டுள்ளது. குறித்த தொடர் நேற்று ஆரம்பமாகியுள்ளது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.08.2023இல் வெளியிடப்பெற்றது.